**O.S. No.214/2018**
**D.W.2 - திரு.மகாலிங்கம்**
**நாள் : 04.03.2026.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. பிரதிவாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க நன்கு தெரியும். நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. **வா.சா.ஆ.1** கிரைய ஒப்பந்த ஆவணத்தில் நான் இரண்டாம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கிரைய மதிப்பு ரூ.27,16,500/- மற்றும் முன்பணம் ரூ.15,00,000/-, கெடு 6 மாதம் என்று குறிப்பிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி **வா.சா.ஆ.1** கிரைய ஒப்பந்தப்படி 1ம் வாதி, பிரதிவாதிக்கு முன்பணமாக ரூ.15,00,000/- கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதிகள் முன்பணத்தை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் கிரைய தொகை ரூ.44,02,020/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் குறிப்பிடுவதுபோல் ரூ.44,02,020/- எந்த ஆவணமும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் வழக்கிற்காக பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 08.03.2024ம் தேதி பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லியிருப்பது தவறானது என்றும் அந்த தேதியில் எந்த ஒரு ஆவணமும் ஏற்படுத்தப்படவில்லை என்றால், அந்த தேதி தவறுதலாக குறிப்பிடபட்டுள்ளது. மேற்படி 08.03.2013ம் தேதிய ஆவணத்தின் நகல் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான், என் வசம் உள்ளது.

**மறு விசாரணை** : இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.04 13:36:00 +0530